DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 66/2021 |
| Deposition of Witness for | : | P.W.6 |
| Name | : | **திரு.ஜான்பிரிட்டோ** |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

**(வழக்கின் 1வது எதிரி ஆஜர் இல்லை. 1வது எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 2 வது எதிரி சிறையில் உள்ளார்.)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 10.03.2026

**<u>முதல் விசாரணை:</u>**

1. நான் தமிழ்நாடு காவல்துறையில் சிவகங்கை மதுவிலக்கு பிரிவில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து கடந்த 31.03. 2023 அன்று பணி நிறைவு பெற்றேன். நான் தற்போது சிவகங்கையில் குடியிருந்து வருகிறேன். கடந்த 08.07.2016 ம் தேதி காலை 11.30 மணியளவில் சிவகங்கை நகர் காவல்நிலைய சார்பு ஆய்வாளராக நான் பணிபுரிந்தபோது அன்றைய தினம் கோகுலே ஹால் தெருவைச் சேர்ந்த சுப்பிரமணி மகன் திருப்பதி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து பூர்வமான புகார் மனுவினை பெற்று நிலையக்குற்ற எண்.498/2016 இதச பிரிவுகள் 392, 397, 506(2)-ன் கீழ் நான் எதிரிகள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன்.

நான் பெற்ற **புகார் மனு அ.த.சா.ஆ.3** ஆகும். முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ.4** ஆகும்.

2. பின்பு புகாரையும் முதல் தகவல் அறிக்கையும் சம்மந்தப்பட்ட நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். மேல்விசாரணைக்காக வழக்கு கோப்பினை ஆய்வாளர் திரு.மோகன் என்பவர் பார்வைக்கு வைத்தேன். ஆய்வாளர் திரு.மோகன் இவ்வழக்கினை மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 08.07.2016 ம் தேதி மதியம் 12.30 மணிக்கு இவ்வழக்கின் சம்பவயிடம் சென்று சம்பவயிடத்தை சாட்சிகள் சீனிவாசன், நாகூர்கனி ஆகியோர்கள் முன்னிலையில் பார்வையிட்டு பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **பார்வை மகஜர் அ.த.சா.ஆ.5** ஆகும். **மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.6** ஆகும்.

3. பின்பு இவ்வழக்கின் சாட்சிகளான திருப்பதி, ராஜா மற்றும் பார்வை மகஜர் சாட்சிகள் சீனிவாசன், நாகூர்கனி ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்பு இவ்வழக்கு சம்மந்தமான எதிரிகளை தேடி வந்த நிலையில் 09.07.2016 ம் தேதி காலை 8.00 மணியளவில் சிவகங்கை முத்துக்காமாட்சி ஆர்ச் செக் போஸ்ட் வாகன தணிக்கை செய்து கொண்டிருந்த போது TN 59 AK 5834 என்ற போர்டு காரை நிறுத்தி விசாரித்தபோது இவ்வழக்கின் எதிரியான தங்கராஜ் என்பவரை ஆய்வாளர் கைது செய்து விசாரித்தபோது அவர் தன்னிச்சையாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் அரவிந்தன், ஹரிபாஸ்கர் என்பவர்கள் முன்னிலையில் பதிவு செய்துள்ளார். ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரி தங்கராஜ் இவ்வழக்கு குற்ற சம்பவத்தையும் பிற குற்ற சம்பவத்தையும் ஒப்புக்கொண்டு ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளார்.

4. பின்பு அதே இடத்தில் காலை 10.45 மணியளவில் எதிரி தங்கராஜ் ஆஜர் செய்த ரூ.5000/- (1000/- ரூபாய் நோட்டுக்கள் 5), வாள் - 1, பொம்மை கைத்துப்பாக்கி - 1, மற்றும் TN 59 AK 5834 என்ற போர்டு காரையும் அத்தாட்சியில் கைப்பற்றியுள்ளார். அந்த **அத்தாட்சி அ.த.சா.ஆ.7** ஆகும். ஆய்வாளர் அத்தாட்சியில்

கைப்பற்றிய **ரூ.5000/- (1000/- ரூபாய் நோட்டுக்கள் 5)-ன் புகைப்படம் அ.த.பொ.சா.1** ஆகும். **வாள்-1 அ.த.பொ.சா.2** ஆகும். **பொம்மை கைத்துப்பாக்கி** - 1 **அ.த.பொ.சா.3** ஆகும். **TN 59 AK 5834 என்ற போர்டு காரின் புகைப்படம் அ.த.பொ.சா.4** ஆகும்.

5. பின்பு ஆய்வாளர் எதிரி தங்கராஜ் மற்றும் வழக்கு சொத்துடன் நிலையம் வந்து எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். சாட்சிகள் அரவிந்தன், ஹரிபாஸ்கர் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். 10.07.2016 ம் தேதி இவ்வழக்கின் மற்றொரு எதிரியான லட்சுமணன் என்பவரை காலை 7.00 மணிக்கு பூவந்தி காவல்நியைல சரக எல்லைக்குட்பட்ட படமாத்தூர் விலக்கு என்ற இடத்தில் வைத்து ஆய்வாளர் அவரை கைது செய்து விசாரித்தபோது அவர் தன்னிச்சையாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் சுந்தரலிங்கம், ஆனந்தகுமார் ஆகியோர்கள் முன்னிலையில் பதிவு செய்துள்ளார். பின்பு அதே இடத்தில் காலை 9.15 மணியளவில் எதிரி லட்சுமணன் வழக்கு சம்பவத்தில் பயன்படுத்திய வாள் ஒன்றை எடுத்து ஆஜர் செய்ததை ஆய்வாளர் அத்தாட்சியில் கைப்பற்றியுள்ளார். அந்த **அத்தாட்சி அ.த.சா.ஆ.8** ஆகும்.

6. ஆய்வாளர் அத்தாட்சியில் கைப்பற்றிய **வாள் அ.த.பொ.சா. 5** ஆகும். பின்பு எதிரி லட்சுமணன் மற்றும் வழக்கு சொத்துடன் நிலையம் வந்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். சாட்சிகள் சுந்தரலிங்கம், ஆனந்தகுமார் ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். **படிவம் 91 (2 தாள்கள்) அ.த.சா.ஆ.9** ஆகும். பின்பு ஆய்வாளர் வழக்கின் விசாரணையை முடித்து 27.11.2016 ம் தேதி எதிரிகள் மீது 392, 397, 506(2)-ன் கீழ் குற்ற இறுதி அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்பித்துள்ளார்.

7. ஆய்வாளர் விசாரணையின்போது அ.சா.1 முதல் அ.சா.2 வரையானவர்கள் இவ்வழக்கு சம்பவத்தில் எதிரிகள் ஈடுபட்டது குறித்தும் அ.சா.3 முதல் அ.சா.5 வரையானவர்கள் ஆய்வாளர் சம்பவயிடத்தை பார்வையிட்டு

பார்வைமகஜர் தயார் செய்தபோது எதிரிகளை கைது செய்து ஒப்புதல்வாக்குமூலம் பெற்று அத்தாட்சியில்வழக்கு சொத்துக்களை கைப்பற்றியபோது உடனிருந்து கையொப்பம் செய்ததாக அவர்கள் விசாரணையின்போது வாக்குமூலம் அளித்துள்ளார்கள். வழக்கு சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. அ.த.பொ.3 பொம்மை துப்பாக்கியை எதிரிகள் வைத்திருந்ததாக அ.த.சா.ஆ.3 புகார்மனுவிலும் வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சொன்னது போல் புகார்தாரர் புகார்மனு கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரிகள் மீது முதல் தகவல் அறிக்கை பொய்யாக பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல, ஆய்வாளர் சம்பவ இடம் சென்று பார்வை மகஜர், மாதிரிவரைபடம் தயார் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. சாட்சிகளை சொன்ன இடத்தில் சொன்ன நேரத்தில் விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது தவறுதலாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. நான் சொன்னது போல் ஆய்வாளர் சொன்ன இடத்தில் சொன்ன நேரத்தில் கைப்பற்றுதல் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் மற்றும் அத்தாட்சி தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல.

2. எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் பெறப்படவில்லை என்றால் சரியல்ல. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின்படி எதிரிகளிடம் எந்தவித சான்றுபொருட்களும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் நீதிமன்றத்திற்கு சான்றுபொருட்களை அனுப்பவில்லை என்றால் சரியல்ல.

சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் எதிரிகளை கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கினை சரிவர புலன் விசாரணை செய்யாமல் ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை:** இல்லை

N SENTHIL MURALI

Digitally signed by N SENTHIL MURALI
Date: 2026.03.10 15:50:35 +0530

**உதவி அமர்வு நீதிபதி,**

**தலைமைக் குற்றவியல் நடுவர்,**

**சிவகங்கை.**